# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

**கொள்கை விளக்கக் குறிப்பு 2013-2014**

**மானியக் கோரிக்கை எண்.15**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**முன்னுரை**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (த.நா.மா.க.வா) தமிழக அரசால் 1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி 1974–ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் 6–ன் படி 1982 –ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது 1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1977–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1981–ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1986–ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் அடங்கிய பின்வரும் விதிகளைச் செயல்படுத்துகிறது.

- 1986–ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள்
- 1994 மற்றும் 2000-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1989-ஆம் ஆண்டு அபாயகரமான

இரசாயனங்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள்.

- 2000-ஆம் ஆண்டு ஒலி மாசு (முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.
- 2000-ஆம் ஆண்டு நகர திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.
- 2000 மற்றும் 2003-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1998-ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.
- திருத்தப்பட்ட 2001-ஆம் ஆண்டு மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்,
- திருத்தப்பட்ட 2008-ம் ஆண்டின் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை, கையாளுதல் மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள்
- 2011-ஆம் ஆண்டின் பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.
- **2011–**ஆம் ஆண்டின் மின்னணு கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.



**2. பணிகள்**

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டங்களின்படி வாரியத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு :–

- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் பற்றிய விரிவான திட்டம் தீட்டுதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் குறித்து மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்புடைய தகவல்களை சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.
- வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை ஆய்வு செய்தல் மற்றும் திட்டங்கள், தரநிர்ணயங்களை சரி செய்வதற்காக அவற்றை பரிசீலனை செய்தல்.

- காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையில் மாசினை குறைக்கும் உபகரணங்களை ஆய்வு செய்தல்.
- காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் காற்றின் தன்மையை அளவீடு செய்ய ஆய்வு செய்தல் மற்றும் காற்று மாசுபடுவதைக் கட்டுப்படுத்துதல், தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவுநீர், தொழிற்சாலைகள், வாகனங்கள் மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து காற்று மண்டலத்தில் வெளியேற்றப்படும் வாயுக்கழிவுகள் ஆகியவற்றிற்கு வரையறைகளை விதித்தல், மாற்றியமைத்தல் அல்லது நீக்குதல்.
- வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவுநீரை சிறந்த சிக்கனமான முறையில் சுத்திகரிப்பு செய்வதற்கான தொழில் நுட்பத்தை உருவாக்குதல்.



- வடிகால் கழிவுநீர், செயல்முறைக்கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளின் மாதிரிகளைச் சேகரித்து குறிப்பிட்ட தன்மைகளை தர அளவீட்டிற்காக பகுப்பாய்வு செய்தல்.
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்க, கட்டுப்படுத்த மற்றும் குறைப்பது சம்பந்தமான திட்டங்களில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை நடத்துதல்.
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில அரசு குறிப்பிடும் பிற பணிகளையும் நிறைவேற்றுதல்.

### 3. வாரிய அமைப்பு

வாரியம் மாநில அரசால் நிறுவப்பட்டது. முழுநேர தலைவர், மாநில அரசால் நியமிக்கப்பட்ட ஐந்து அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்களின் சார்பில் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள், விவசாயம், தொழில்

மற்றும் மீன்வளம் ஆகிய தொழில்களைச் சார்ந்த மூன்று அலுவல் சாரா உறுப்பினர்கள், மாநில அரசு நிறுவனங்கள் அல்லது அரசு கழகங்களைச் சார்ந்த இருவர் மற்றும் ஒரு முழுநேர உறுப்பினர் செயலர் ஆகியோரை வாரியம் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. வாரியம், சென்னையில் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலங்கள் என மூன்று நிலை அமைப்புகளாக மொத்தம் 759 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. வாரியத்தின் கள அமைப்பில் 32 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன. 29 மாவட்ட அலுவலகங்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையிலும் மற்றும் 3 உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையிலும் இயங்குகின்றன. தொழிற்சாலைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, வாரியத்தில் 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் மற்றும் 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் செயல்படுகின்றன. இந்த ஆய்வகங்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர், வாயுக்கழிவு மற்றும் அபாயகரமான கழிவுகள் ஆகியவற்றின் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்கின்றன.



## 4. தொழிற்சாலை கண்காணிப்பு மற்றும் இசைவாணை வழங்குதல்

தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் தொழிற்சாலைமயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. வாரியத்தின் கள அலுவலர்கள் தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, செயல்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். மேலும், பொது மக்கள், அரசு மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மாசு பற்றிய புகார்களையும் ஆய்வு செய்கின்றனர். தொழிற்சாலைகளைச் சீரிய முறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மாசு தன்மையின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என பிரிவுகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலையின் மொத்த முதலீட்டின் அடிப்படையில்

அவை பெரிய, நடுத்தர, மற்றும் சிறு தொழிற்சாலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் வகை மற்றும் பிரிவுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கண்காணிக்கப்படுகின்றன.

## 5. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை

தொழிற்சாலைகள், வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவுநீரினை, நீர் வழி அல்லது கிணறு அல்லது வடிகால் கழிவுநீர் அல்லது நிலத்தில் வெளியேற்றுவதற்காக திருத்தப்பட்ட 1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் இசைவாணையும், காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் தமிழ்நாடு முழுவதும் தொழிற்சாலையினை இயக்குவதற்காக திருத்தப்பட்ட 1981–ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் இசைவாணையும் வாரியத்திடம் பெறவேண்டும். வாரியம் தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டமாக இசைவாணைகளை வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை



கட்டுமானப் பணிகளைத் துவங்குவதற்குமுன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணையில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைப்பிடித்த தொழிற்சாலைகளுக்கு உற்பத்தியை தொடங்கும் இசைவாணை வழங்கப்படுகிறது.

2012-2013 ஆம் ஆண்டில் **17,313** வடிகால்கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவுநீர் மாதிரிகள் தொழிற்சாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. **2012–2013** ஆம் ஆண்டில் வாரியம், **1974–**ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் அமைக்க **1388** இசைவாணைகளையும் மற்றும் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்க **1385** இசைவாணைகளையும் வழங்கியுள்ளது.

இசைவாணை வழங்குதல்/புதுப்பித்தல், அங்கீகாரம் வழங்குதல் போன்ற பணிகள் தற்பொழுது

கோப்புகள் மூலம் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை துரிதப்படுத்தும் நோக்கில் கணினிமயமாக்க, பிற மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் தற்பொழுது பயன்படுத்தி வரும் மென் பொருளை, இவ்வாரியத்திற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்து பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**6. உதவி மையம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது, 1974 ஆம் ஆண்டின□ நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆம் ஆண்டின□ காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1986 ஆம் ஆண்டின□ சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை செயல்படுத்துகிறது. இச்சட்டங்களை நடைமுறைபடுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகளுக்கு இசைவாணை / அங்கீகாரம் வழங்குகிறது. தொழிற்சாலைகள் / தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் இசைவாணை பெற விண்ணப்பம் மற்றும் இதர விண்ணப்பங்களைத் தேவையான இணைப்புகளுடன் பூர்த்தி செய்து தமிழ்நாடு



மாசு கட்டுப்பாடு வாரியத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக தொழிற்சாலைகள் / தொழில் முனைவோருக்கு விண்ணப்பப் படிவங்களை எளிதில் பூர்த்தி செய்ய வழிகாட்டவும், விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் முறையினை எளிமைப் படுத்தவும் மற்றும் முறைப்படுத்தவும் இசைவாணைகளை விரைவில் வழங்கவும் தனியாக குழு அமைக்கப்பட வேண்டும் என வாரியம் உணர்ந்தது.

எனவே, தமிழ□நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற□சாலைகளுக்கு உதவும் வகையிலும், விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரர்கள□ சிரமமின□றி பூர்த்தி செய□து அதனை வாரியத்தில□ எளிய முறையில□ சமர்ப்பிக்கவும், இசைவாணைகளை உரிய காலத்திற□குள□ வழங்கும் வகையில□ இவை அனைத்தும் ஒரே இடத்தில் நடைபெற இதற□கென தனியாக ஒரு உதவி மையத்தை ஏற□படுத்தியுள□ளது. இம்மையத்தில் அனைத்து வகையான இசைவாணை கட்டணங்களும் பெறப்படுகிறது. முதல□ கட்டமாக, உதவி மையமானது சென□னை, திருவள□ளூர் மற□றும் காஞ□சிபுரம் மாவட்டங்களில□ அமைந்துள□ள வாரிய

அலுவலகங்களான சென□னை, அம்பத்துார், திருவள□ளூர், ஸ்ரீபெரும்புதுார், மற□றும் தாம்பரம் ஆகியவற□றின□ கட்டுப்பாட்டுக்குள□ அமைந்துள□ள தொழிற□சாலைகள□ மற□றும் உள□ளாட்சி அமைப்புகளின□ தேவைகளை உதவி மையம் பூர்த்தி செய□யும். உதவி மையம் விண்ணப்பப்படிவத்தினை எளிமையாக்கியதோடு பூர்த்தி செய□யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள□ பெறுவதற□கான நடைமுறைகளை ஏற□படுத்தியுள□ளது. மேலும் விண்ணப்பப்படிவங்கள□ பெறப்பட்டதிலிருந்து இசைவாணை வழங்கும் வரை விண்ணப்பங்களை அவ□வப்பொழுது உன□னிப்பாக கண்காணித்து வருகின□றது. இந்த மையமானது சுற□றுச்சூழல□ சட்டங்கள□ குறித்து தொழிற□சாலைகளுக்கு விளக்கங்களை அளிப்பது, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து வாரியத்திற□கு சமர்ப்பிப்பதற□கு உதவுவது, விண்ணப்பப்படிவங்களின□ நிலை குறித்து தெரிவிப்பது, இசைவாணைகளை உரிய கால அளவிற□குள□ வழங்குவது போன□ற பணிகளை ஒற□றை



சாளரா முறையில□ செய□யும். இதற□கென மூன□று அலுவலர்கள□ பணி அமர்த்தப்பட்டுள□ளனர்.

இசைவாணை, கீழ□க்குறிப்பிட்டுள□ள கால அளவுக்குள□ வழங்க உதவி மையம□ ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **தொழிற□சாலைகளின □ வகை** | **இசைவாணை வழங்க /மறுக்க கால அளவு** |
|---|---|---|
| 1. | சிவப்பு | 30 நாட்கள□ |
| 2. | ஆரஞ்□சு | 15 நாட்கள□ |
| 3. | பச்சை | 10 நாட்கள□ |

உதவி மையத்தில□ விண்ணப்பம் கொடுத்த அனைத்து விண்ணப்பதாரர்களும், தமிழ□நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின□ வலை தளத்தில□□ தங்களது விண்ணப்பப்படிவத்தின□ தற□போதைய நிலை குறித்து அறிந்து கொள்வதோடு விண்ணப்பங்கள□ பூர்த்தி செய□வதில□ ஏற□படும் சந்தேகங்கள□, தங்களது விண்ணப்பங்களின□ நிலை, இசைவாணை / அங்கீகாரம் வழங்கும் நிலை, போன□ற விவரங்களைத் தொலைபேசி மூலமும் உதவி மையத்தினை தொடர்பு கொண்டு உயர்

அலுவலரிடமிருந்து அறிந்து கொள்ளலாம். உதவி மையத்தின் நடவடிக்கைகளை வாரியத்தின் உயர் அலுவலர்கள் அவ்வப்போது கண்காணிப்பர்.

2012–13ஆம் ஆண்டில் 1760 விண்ணப்பப்படிவங்கள் உதவி மையத்தால் பெறப்பட்டு, 1025 இசைவாணைகள் வழங்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் ரூ.695.77 இலட்சம் இசைவாணைத் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.

## 7. ஆய்வு மற்றும் மாதிரிகளை எடுப்பதற்கான காலவரையரை

மாவட்ட அலுவலகத்தில் உள்ள களப்பொறியாளர்கள் பெரிய முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை நான்கு மாதத்திற்கு ஒரு முறையும், சிறிய முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகை தொழிற்சாலைகளை வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். இதைப் போன்றே பெரிய மற்றும் நடுத்தர முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை



ஆறு மாதத்திற்கு ஒரு முறையும், சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை இரண்டு வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் பச்சை வகை தொழிற்சாலைகள் அனைத்தும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

## 8. பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிலை

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது. சிறு தொழிற்சாலைகளுக்குப் போதிய இடவசதி மற்றும் நிதி வசதி இல்லாமை மற்றும் பிற காரணங்களால் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க சாத்தியமில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சிறு தொழிற்சாலைகளுக்குப் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுவதிலும், திட்டக் கருத்துருவின் மீது தொழில்நுட்ப நுண்ணாய்வு செய்வதிலும் உதவி

செய்கிறது. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விபரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 13 திட்டங்கள் |
| சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 30 திட்டங்கள் |
| உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் |
| **மொத்தம்** | 44 |

தோல் தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 13 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 6 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைபாட்டை அடைந்துள்ளன. சாயப்பட்டறைகள் மற்றும் சலவைப் பட்டறைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 30 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில், 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளதோடு அவற்றுள் 16 நிலையங்கள் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலைபாட்டை அடைந்துள்ளன. மீதமுள்ள 12 நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.



பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன. 2003–2004ஆம் ஆண்டிற்கு முன் தமிழக அரசு, பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 26.88 கோடியினை மானியமாக வழங்க அனுமதி அளித்துள்ளது. இதில் 31.03.2003 வரை ரூபாய் 22.66 கோடி, வாரியம் மற்றும் தமிழ்நாடு தோல் மேம்பாட்டு கழகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2003–2004, 2004–2005, மற்றும் 2005–2006 ஆண்டுகளில் மாநில அரசு மானியமாக ரூபாய் 86.49 இலட்சம், தி/ள். கோவை தெலுங்குபாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கும், ரூ.114.32 இலட்சம் தி/ள் பெருந்துறை பொது சுத்திகரிப்பு நிலையம் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### 8.1. திருப்பூரில் உள்ள சாயப்பட்டறை / சலவை பட்டறைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

நொய்யல் ஆறு ஆயக்கட்டுதாரர்கள் பாதுகாப்பு சங்கம், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 28.01.2011

அன்று வழங்கிய உத்தரவின் படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 01.02.2011 அன்று திருப்பூரில் உள்ள 20 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தொடர்புடைய 754 சலவை மற்றும் சாயப்பட்டறைகளை மூடியது.

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களை பாதிப்புக்கு உள்ளாக்கும் இப்பெரும் பிரச்சினைக்கு தீர்வு காண மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 28.07.2011 அன்று, திருப்பூர் சாயப்பட்டறைகள் உரிமையாளர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய கூட்டத்தின் முடிவில், கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலை அடைவதற்கான தொழில் நுட்பத்தை மேம்படுத்த ரூ.200 கோடியை வட்டியில்லாத கடனாக, வழங்குவதாக அறிவிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை 31.01.2012 நாளிட்ட அரசு ஆணை எண்.11–ல் 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையகளுக்கு ரூ.179.34 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன.



மேலும் 16 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ள 427 உறுப்பினர் சலவை மற்றும் சாயப்பட்டறைகளை அதிகபட்சமாக 30 முதல் 70 சதவீதம் வரையிலான கொள்ளளவில் கழிவுநீரின் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலை அமைப்பினை இயக்கி, நிரூபிக்க, முன்னோட்டம் (Trial run) செய்ய தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதியளித்துள்ளது. இது தவிர 57 தனியார் தொழிற்சாலைகள், மேற்படி தொழில் நுட்பத்தினை நிறுவியதால் வாரியத்தால் இயங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

அதே சமயம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அரசு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடு தொகைக்காக ரூ.2.55 கோடியினை செப்டம்பர் 2011ல் திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கியது. இது தவிர மேலும் ரூ.75 கோடியினை, அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 31.12.2011 நாளிட்ட அரசாணை எண். 209 – ன் மூலம் 15 வருடங்களாக நீதிமன்றத்தில்

வழக்கு தொடர்ந்து போராடி வரும் நொய்யல் ஆறு ஆயக்கட்டுதாரர்கள் பாதுகாப்பு சங்கத்தின் உறுப்பினர்களான 535 விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்டது.

மாண்புமிகு உயர்நீதி மன்றத்தின் உத்தரவின்படி மேற்கண்ட அரசு ஆணை ரத்து செய்யப்பட்டது. எனவே, வாரியம் மொத்த தொகையான ரூ.75 கோடியினை திரும்ப செலுத்தியது. மேலும், இது தொடர்பாக அரசு மற்றும் நொய்யல் ஆறு ஆயக்கட்டுதாரர்கள் பாதுகாப்பு சங்கம், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்கள். இது தொடர்பான வழக்கு மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

## 8.2. தோல் தொழிற்சாலைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

தமிழ்நாட்டில் 775 தோல் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இவை வேலூர், காஞ்சிபுரம், திண்டுக்கல், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் பெருவாரியாக உள்ளன.



இவை தோல் பதனிடுவதற்கு கிழக்கிந்திய பதனிடும் முறை / குரோம் பதனிடும் முறை ஆகியவற்றைப் பின்பற்றுகின்றன.

மேற்குறிப்பிட்ட 775 தோல் தொழிற்சாலைகளில் 641 தொழிற்சாலைகள் 13 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ளன. எஞ்சிய 134 தொழிற்சாலைகள் தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துள்ளன. இவற்றுள் 75 தொழிற்சாலைகள் எதிர்மறை சவ்வூடுபரவல் மற்றும் கழிவினை கையாளும் முறையினையும் நிறுவி இயக்கி வருகின்றன.

மேலும், 13 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், 6 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் முறையே பெருந்துறை சிப்காட், வேலூர் மாவட்டத்தில் உள்ள சிட்கோ ராணிப்பேட்டை, பேர்ணாம்பட், திருச்சி, மேல் விஷாரம் மற்றும் ராணிப்பேட்டை ஆகியவை எதிர்சவ்வூடு பரவல் முறை மற்றும் அடர்கசடு மேலாண்மை முறையினை அமைத்து இயக்கி வருகின்றன. மேலும் சிட்கோ-சிப்காட் நிலை II

ராணிப்பேட்டை, மாளிகை தோப்பு, ஆம்பூர் ஆகிய 3 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பம்மல் – பல்லாவரம் பொது கழிவு சுத்திகரிப்பு நிலையம் ஒரு மாதத்திற்குள் எதிர் சவ்வூடு பரவல் முறையினை இயக்க உள்ளது. வாணியம்பாடி மற்றும் தூத்திப்பெட், ஆம்பூர் ஆகிய 2 பொதுக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களிலும் அடர்கசடு மேலாண்மை அமைப்பு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. திண்டுக்கல் மற்றும் மாதவரத்தில் உள்ள பொது சுத்திகரிப்பு நிலையங்கள் சுத்திகரிக்கப்பட்ட தொழிற்கழிவு நீரினை அந்தந்த ஊரில் உள்ள நகராட்சியின் மூன்றில் ஒரு பங்கு சுத்திகரிக்கப்பட்ட அன்றாட கழிவுநீருடன் கலந்து, கழிவுநீரில் மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவினை, குறிப்பிட்ட அளவுக்குள் கொண்டுவர வாரியத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## 9. கழிவுப் பொருட்கள் மேலாண்மை

### 9.1. நகர திடகழிவுகள் மேலாண்மை

நகர மயமாதல் அதிகமாவதாலும், நகர திடக்கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும், அறிவியல் ரீதியாக திடக்கழிவுகளை மேலாண்மை செய்வது அவசரத் தேவையாகிறது. ஏனென்றால் மாநகரங்களில் இதை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும் இதனை செயல் படுத்தும் அதிகாரம் மாநகராட்சி ஆணையர்களுக்கும் உள்ளது. இது போன்றே மாவட்ட அளவில் நடைமுறைப் படுத்தும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கும், செயல்படுத்தும் அதிகாரம் நகராட்சி ஆணையர்களுக்கும் உள்ளது. நிலத்தடி நீர், சுற்றுப்புற காற்றின் தன்மை, நகரத்திடக் கழிவுகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் மற்றும் நகரத்திடக் கழிவுகளிலிருந்து பெறப்படும் உரத்தின் தரம் மற்றும் நகரத்திடக் கழிவுகளை உரமாக்கும் மற்றும் வெளியேற்றும் அமைப்புகளில் உள்ள எரிப்பானின் திறனை கண்காணித்தல் போன்ற பணிகளை நகராட்சிகள் கண்காணிக்க அங்கீகாரம் வழங்கும்

அதிகாரம் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்திற்கு உள்ளது. வாரியம், உயிரகக் கழிவுகளை உரமாக்குவதற்காக 7 மாநகராட்சிக்கும், 76 நகராட்சிகளுக்கும் மற்றும் 114 பேரூராட்சிகளுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. திடக் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்து கையாளுதல், குறைத்தல், மறு சுழற்சி செய்தல் மற்றும் மறு உபயோகம் செய்தல் போன்றவற்றை வாரியம் பரிந்துரைக்கிறது.

**9.2. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை**

கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் பிளாஸ்டிக் போன்ற மக்காத பொருட்களின் பயன்பாடு தமிழ்நாட்டில் பல மடங்கு அதிகரித்துள்ளது. இந்த மக்காத பொருட்கள் பயன்பாட்டுக்குப் பின் சாலையோரங்களில், நீர்நிலைகளில், குளங்களில், கால்வாய்களில் மற்றும் திறந்த வெளிப் பகுதிகளில் தூக்கி எறியப்படுகின்றன மற்றும் அவை நகர திடக்கழிவுகளுடன் கலந்து, நகர திடக்கழிவுகள் கொட்டி வைக்கும் இடங்களுக்கு சென்று விடுகின்றது. மக்காத பிளாஸ்டிக்



கழிவுகள் நிலம், நீர் மற்றும் காற்று மண்டலத்தை மாசு படுத்துகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக கையாளுவதற்கு பல வழிமுறைகளை வகுத்துள்ளது. வாரியம், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் கழிவுகளால் உண்டாகும் தீய விளைவுகளை உணர்த்தவும் மற்றும் இதற்கு மாற்றாக உள்ள பொருட்களைப் பயன்படுத்துவதின் தேவை பற்றியும் பல விழிப்புணர்வு முகாம்களை நடத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள், கல்விக் கூடங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிக்கு ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாது என்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இதுவரை, 2561 பிளாஸ்டிக் பை, பிளாஸ்டிக் விரிப்பு, பிளாஸ்டிக் கயிறு, பி.வி.சி குழாய் மற்றும் ஏனைய பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைக்

கண்டறிந்துள்ளது. மேற்கண்ட 2561 தொழிற்சாலைகளில் ஏறக்குறைய 489 தொழிற்சாலைகள், மறுசுழற்சி செய்யப்படும் பிளாஸ்டிக் பொருட்களில் இருந்து பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளாகும். இத்தொழிற்சாலைகள் அனைத்தும் நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

மைய அரசானது 2011 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை 04.02.2011 அன்று அறிவிக்கை செய்துள்ளது. மேற்கண்ட விதிகளின்படி 40 மைக்ரான் தடிமனுக்குட்பட்ட புதிய அல்லது மறுசுழற்சி செய்யப்பட்ட அல்லது இரண்டும் கலந்த எந்த விதமான பிளாஸ்டிக் பைகளை எவரும் உற்பத்தி செய்யவோ, சேமித்து வைக்கவோ, பிரித்துக் கொடுக்கவோ மற்றும் விற்கவோ கூடாது. பிளாஸ்டிக் கைபைகள், பல அடுக்குகள் கொண்ட பிளாஸ்டிக் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் மறு சுழற்சி மூலம் பிளாஸ்டிக் கைபைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் பதிவு செய்து சான்றிதழ் பெற வேண்டும். வாரியம் இதுவரை 121



பிளாஸ்டிக் கைபைகள் /பலஅடுக்கு கொண்ட பிளாஸ்டிக் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு பதிவு சான்றிதழ் வழங்கியுள்ளது.

வாரியம் அனைத்து மாவட்டங்களிலும் பிளாஸ்டிக் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிப்பு மையம் அமைக்க குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்நிகழ்ச்சிகள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கங்களுடன் இணைந்து நடத்தி வருகின்றது. சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை வெட்டும் இயந்திரத்துடனான பிளாஸ்டிக் சேகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டு இம்மையங்களில் சேகரிக்கப்படும் கழிவுகள் மாநகராட்சி சாலைகள் மற்றும் உள்ளாட்சி சாலைகள் போட பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி எண்ணை தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளிக்கின்றது. சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட்

ஆலைகளில் உள்ள உலைகளில் இணை எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

## 9.3. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மேலாண்மை

தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாகக் கையாளுவதற்குத் தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. 2008–ஆம் ஆண்டு அறிவிக்கை செய்யப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை, கையாளுதல் மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகளின்படி 31.03.2012 வரை 2771 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளன. கும்மிடிபூண்டியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப்பொருட்களை, பாதுகாப்பாக சுத்திகரித்து நிலம்நிரப்பும் பொதுவசதி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது தவிர,



திருப்பூரில் அமைந்துள்ள பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, கரூரில் அமைந்துள்ள பொதுக்கழிவு மற்றும் தனியார் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருட்களை சுத்திகரித்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்த திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், நல்லூார் கிராமம் கருப்பக்கவுண்டர்பாளையம், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மத்தகிரி கிராமத்திலுள்ள இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவ்விரண்டுக்கும் வாரியத்தால் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்கான இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகக் கொள்கையை மேற்கொள்வதற்காக பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவுகளை மூலப்பொருளாக பயன்படுத்துவதற்கு சிமெண்ட் தொழிற்சாலைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வரும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுத்திகரித்து பாதுகாப்பாக அகற்றுவதற்காக பெருந்துறை சிப்காட் வளாகத்தில் உரிய வசதியை ஏற்படுத்த, மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால்

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இதே போன்ற வசதியினை காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் ஏற்படுத்த தக்க இடம் ஒதுக்க சிப்காட்டுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

## 9.4. மருத்துவக் கழிவுகள் மேலாண்மை

**1998–**ஆம் ஆண்டு மருத்துவ கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், மருத்துவ கழிவுகள் உருவாக்குதல், சேகரித்தல், பெறுதல், சேமித்தல், எடுத்துச் செல்லுதல், சுத்திகரித்தல், வெளியேற்றுதல் அல்லது கையாளுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களுக்குப் பொருந்தும். இந்த விதிகளின் படி, மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளை கையாளுவதற்கு வாரியத்தின் அங்கீகாரம் பெற வேண்டும். மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு எந்தவொரு பாதிப்புமில்லாமல் மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளை கையாளுவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவது மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளை வெளியேற்றும் நிறுவன உரிமையாளரின் கடமையாகும். மேற்கூறிய விதிகளின்டி



மருத்துவ நுண்ணுயிர் கழிவு, சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றம் ஆகியவை இவ்விதிகளில் உள்ள அட்டவணை **1–**ல் குறிப்பிடப்பட்டுள்ளபடியும் மற்றும் அட்டவணை **2–**ல் குறிப்பிடப்பட்ட வரையறைக்குட்பட்டும் வெளியேற்றப்பட வேண்டும்.

வாரியம், இதுவரை தமிழ்நாட்டில் 3707 தனியார் மற்றும், 308 அரசு மருத்துவமனைகளைக் கண்டறிந்துள்ளது. மேற்படி அனைத்து மருத்துவமனைகளும் மருத்துவக் கழிவு மேலாண்மை செய்யும் பொது அமைப்புடன் ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு செய்யும் நிலையங்களில், உயர் அழுத்த நீராவி மூலம் சுத்திகரிக்கும் கருவி, நறுக்கும் கருவி, எரிப்பான் மற்றும் பாதுகாப்பான நிலநிரப்புதல் ஆகிய அமைப்புகள் உள்ளன. தமிழ்நாட்டில் **11** இடங்களில் பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. அவ்விடங்கள் பின்வருமாறு **:–**

| மாவட்டம் | கிராமம் |
|---|---|
| காஞ்சிபுரம் | தென்மேல்பாக்கம் கிராமம் மற்றும் கின்னார் கிராமம் |
| வேலூர் | கண்டிபேடு கிராமம் |
| கோயம்புத்தூர் | ஒரட்டு குப்பை (இரண்டு வசதிகள்) |
| தஞ்சாவூர் | செங்கிப்பட்டி |
| இராமநாதபுரம் | முத்துவயல் |
| நீலகிரி | குன்னூர் |
| திருநெல்வேலி | பாப்பன்குளம் |
| சேலம் | தங்காயூர் |
| விருதுநகர் | உண்டுருமிக்கிடாக்குளம் |

வாரியம் மேற்படி 11 பொது அமைப்புகளுக்கும் மற்றும் அதன் கீழ் உள்ள 3450 மருத்துவமனைகளுக்கும் மருத்துவக் கழிவுகளைக் கையாளுவதற்கான அங்கீகாரம் அளித்துள்ளது.



**9.5. மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை**

மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு முயற்சிகளை எடுத்துவருகிறது. இதன் தொடர்பாக அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தேசிய உலோகப் பொறியியல் ஆய்வு நிறுவனத்தின் வல்லுநர் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று தமிழ்நாட்டில் உள்ள மின்னணுக் கழிவுகள் மேலாண்மை குறித்து ஆராய அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு மின்னணுக்கழிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. மின்னணுக் கழிவுகளைப் பிரித்து மறுசுழற்சி செய்யும் 19 தொழிற்சாலைகளுக்கு, மின்னணுக் கழிவுகளை முறையாகப் பிரித்து அவற்றில் உள்ள அச்சு சுற்றுத்தகடு, ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று, இரும்பு, செம்பு, ரப்பர், கண்ணாடி முதலியவற்றை பிரித்தெடுப்பதற்கு இசைவாணை வழங்கியுள்ளது. இவற்றில் அச்சுச் சுற்றுத்தகடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று முதலியவை அமெரிக்க ஐக்கிய நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற

மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் உள்ள கன உலோகங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. மற்ற கழிவுகள் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மறுசுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன. வாரியமானது இதுவரை 19 தொழிற்சாலைகளுக்கு இயக்க இசைவாணை வழங்கியுள்ளது.

## 10. காற்று மற்றும் நீரின் தன்மையை கண்காணிக்க வாரியத்தின் நடவடிக்கைகள்

### 10.1 . காற்றின் தன்மை கண்காணிப்பு

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் புகையினாலும் சுற்றுப்புறக்காற்றின் தன்மை மாசடைகிறது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981–ன்படி தமிழ்நாடு முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சுற்றுப்புற காற்று கண்காணிப்புத் திட்டங்களின் கீழ் சென்னை (8



இடங்கள்), கோவை (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்), சேலம் (1 இடம்) மற்றும் திருச்சி (5 இடங்கள்) ஆகிய இடங்களில் காற்று கண்காணிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இத்திட்டமானது மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 50 சதவிகித நிதி உதவியுடன் செயல்பட்டுவருகின்றது. கடலூரில் 3 இடங்களிலும் மற்றும் மேட்டூரில் 2 இடங்களிலும் தேசிய சுற்றுப்புற காற்று கண்காணிப்பு திட்டத்தின் கீழ் காற்று கண்காணிப்பு நிலையங்கள் அமைக்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தவிர, காற்று மாசு கண்காணிப்பினை தீபாவளி மற்றும் போகி பண்டிகைக் காலங்களில் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் வாரியம் மேற்கொண்டு வருகிறது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், சுற்றுப்புற காற்று மாசுக்கான புதிய தர அளவுகளை நிர்ணயித்து 18.9.2009 முதல் அமல்படுத்தியுள்ளது. இந்நிலையங்களில் சுற்றுப்புறக் காற்றின் தன்மையினை குடியிருப்பு, தொழிற்சாலை, வர்த்தகம் மற்றும் கலப்பு பகுதிகளில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**10.2. தொடர் காற்று கண்காணிப்பு மையம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தனது தலைமை அலுவலகத்தில் தொழிற்சாலை புகைபோக்கியிலிருந்தும், தொழிற்சாலையினை சுற்றியுள்ள காற்றின் தரத்தை கண்காணிக்கும் பொருட்டு ஒரு தொடர் காற்று கண்காணிப்பு மையத்தினை அமைத்துள்ளது. வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணிநேரமும் தொடர்ச்சியாக உமிழ்வுகளில் ஏற்படும் அளவுகளை உடனுக்குடன் கண்காணிக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய மையம் இந்தியாவில் வேறெங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்ததோடு, இது மத்திய அரசால் பெரிதும் பாராட்டப் பெற்றது. தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் வாயுக்களின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும் பொழுது இந்த மையத்தில் ஒலி எழுப்பான்கள் மூலம் எச்சரிக்கை மணி ஒலிப்பதோடு அக்காற்றின் தன்மை அளவு மீறும் தொழிற்சாலைக்கும், மாவட்ட பொறியாளர் மற்றும் உறுப்பினர் செயலருக்கு, நிவாரண நடவடிக்கை உடனடியாக எடுக்கும் பொருட்டு குறுந்தகவல் தானாக அனுப்பப்படும். இதுவரை சுமார் 115 தொழிற்சாலைகள்



தொடர் காற்று கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டு, இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையின் தன்மை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது தவிர கழிவுநீர் வெளியேற்றப்படும் அளவுகளும் இம் மையத்தில் கண்காணிக்கப்படுகிறது.

**10.3. நீரின் தன்மை கண்காணிப்பு**

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் முக்கிய நோக்கமானது நீரின் முழுத்தன்மையைப் பேணுதல் மற்றும் சீரமைத்தல் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற நீரின் தன்மையை ஒழுங்காகக் கண்காணிப்பது அவசியமாகிறது. எனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் காவிரி மற்றும் அதன் உப நதிகளின் நீரின் தன்மையை இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு (மினார்ஸ்) திட்டத்தின் கீழ் 43 இடங்களிலும் மற்றும் புவி சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு (ஜெம்ஸ்) திட்டத்தின் கீழ் 4 இடங்களிலும் கண்காணித்து வருகின்றது. மேலும் உதகமண்டலம் ஏரி, கொடைக்கானல் ஏரி, ஏற்காடு ஏரி,

வீராணம் ஏரி, பூண்டி ஏரி, செங்குன்றம் ஏரி, போரூர் ஏரி மற்றும் பழவேற்காடு ஏரி ஆகிய 8 ஏரிகளின் நீரின் தன்மையையும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டத்தின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

### 10.3.1 தாமிரபரணி ஆறு

12 இடங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. தாமிரபரணி நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், உகந்ததாக உள்ளது.

### 10.3.2 காவிரி ஆறு மற்றும் உப நதிகள்

33 இடங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. பொதுவாக காவிரி மற்றும் அதன் உபநதிகளின் நீரின் தரம் குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், மீன்வளர்ப்பு மற்றும்



வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக உள்ளது.

### 10.3.3 வைகை ஆறு

வைகை ஆற்று நீரின் தன்மை, திருபுவனம் நீரேற்று நிலையத்தின் நீர்சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர்மாதிரி சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. வைகை ஆற்று நீரின் தன்மை பொதுவாக குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், உகந்ததாக உள்ளது.

### 10.3.4 பாலாறு

பாலாற்று நீரானது, வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள நீர்சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. ஆய்வறிக்கையின் புள்ளி விவரப்படி நீர் சேகரிப்பு கிணற்று நீரின் தரம் பொதுவாக முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக உள்ளது.

### 10.3.5 ஏரிகள்

உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், பூண்டி, செங்குன்றம், போரூர் மற்றும் புலிகேட் ஏரிகளில் நீர் மாதிரிகள் சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நீரின்தன்மை முறையான சுத்திகரிப்பும், அதை தொடர்ந்து கிருமிநாசினிமூலம் சுத்திகரிப்பும் செய்து, குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் மீன்வளர்ப்பு, வனவிலங்குகள் எண்ணிக்கை பெருக்கத்திற்கு உகந்ததாக உள்ளது.

### 10.4. சென்னை மாநகர நீர்வழிக் கண்காணிப்பு திட்டம்

அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், ஒட்டேரி நல்லா ஆகிய நான்கு நீர்வழித் தடங்களில் உள்ள 13 நீர் நிலைகளிலும், 18 தொழிற்சாலை கழிவு நீர் வெளியேற்ற நிலைகளிலும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்தும் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது.



## 11. வாரியத்தின் இதர முக்கிய பணிகள்

### 11.1. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒரு பகுதியான சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் 1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள் மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும். இந்த பயிற்சி நிலையம் 2012-2013 ஆம் ஆண்டில் 22 பயிற்சி வகுப்புகள் நடத்தி **2186** நபர்களுக்கு பயிற்சியளித்துள்ளது.

### 11.2. தூய்மையான தொழில் நுட்பங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பெரும் தொழிற்சாலைகளையும் வழக்கமான சுத்திகரிப்பு முறைக்கு மாற்றாக தூய தொழில்நுட்ப முறையினை மேற்கொள்ள வலியுறுத்துகின்றது. வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன்

தொழிற்சாலைகள், எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், பி.பி.சி சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30 சதவிகிதம் வரை எரிசாம்பலை பயன்படுத்துதல், கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல், சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்கு பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக்கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ – குளோரைட்ஸ் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனைச் சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் தற்போது முறையாக



சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி வருகின்றன.

### 11.3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

போகிப்பண்டிகையின் போது ஏற்படும் காற்று மாசினை அறிந்து கொள்ளும் பொருட்டு போகிப்பண்டிகைக்கு முந்தைய நாள் மற்றும் போகிப்பண்டிகை நாளன்று சென்னையில் 15 இடங்களில் சிறப்பு காற்று தர அளவீடு நடத்தப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகைக் காலங்களில் ஒலி மற்றும் காற்றுத்தர ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. மேலும், இந்த ஆய்வுகள் பிற முக்கிய நகரங்களான சென்னை, திருச்சி, கோவை, மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஒசூர், திருப்பூர், திண்டுக்கல் மற்றும் கடலூரிலும் நடைபெற்றுள்ளது.

விழிப்புணர்வுகள் தவிர பள்ளி குழந்தைகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த நடமாடும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாகனத்தின் மூலம்

ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பொது மக்கள் பள்ளி குழந்தைகள் மற்றும் பிற நிறுவனங்கள் போன்றவற்றில் நடத்தியுள்ளது.

## 11.4. சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தற்போதைய நிலை 2012–2013

**ரூபாய் 50 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கணினி மயமாக்கல்**

- குஜராத் மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவை இணைந்து கணினி மயமாக்குதல் குறித்து 16.07.2012 மற்றும் 08.08.2012–ல் விளக்க உரை அளித்துள்ளது.
- எக்ஸ்.ஜி.என். மென்பொருளை வாரியத்திற்கு உகந்ததாக புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்யப்பட்டுள்ளது.



**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு ரூ 50 லட்சம் செலவில் இணைய தள வசதியுடன் கூடிய நோட்புக் / கையடக்க கணினி வழங்குதல்**

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 11.9.2012ல் மாவட்ட பொறியாளர்களுக்கு கையடக்க கணினி வழங்கப்பட்டது.

**உதவி பொறியாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் விஞ்ஞானி பணியிடங்கள் நிரப்புதல்**

- 52 உதவி பொறியாளர்கள் மற்றும் 12 சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

**ரூபாய் 3.75 கோடி செலவில் விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய கட்டிடம் கட்டுதல்**

- திருத்தப்பட்ட கட்டிட வரைபடம் மற்றும் செலவின மதிப்பீடு பொதுப்பணித் துறையிடமிருந்து பெறப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

**ரூபாய் 6.25 கோடி செலவில் சென்னையில் 5 இடங்களில் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் நிறுவுதல்**

- **5** தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்களுக்கான கருவிகள் ஜீலை மாதம் **2013** க்குள் வாங்கப்படும்.

**ரூபாய் 1.2 கோடி செலவில் சென்னை மாநகராட்சியில் ஒரு நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம் நிறுவுதல்**

- நடமாடும் ஒரு தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையத்திற்கான கருவிகள் வரும் ஜீலை **2013**க்குள் வாங்கப்படும்.

**புதிய மின்னணுக் கழிவுகள் (E-Waste) மறு சுழற்சிக்கான வழி காட்டுதல்கள் இயற்றப்படும்.**

- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மின்னணுக் கழிவுகள் மேலாண்மை குறித்த வழிகாட்டுதல்களை இறுதி செய்துள்ளது.



- மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரிய புதிய வழிகாட்டுதல்களின்படி வாரியம் புதிய வழிகாட்டுதல்களை தயாரிக்கும் பணியில் முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளது.

**11.5. நூலகம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நூலகம் **1989–**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் **11,092** புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட **76** இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), **9** செய்தி மடல்கள், **16** சுற்றுச்சூழல் குறித்த மாத இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துவதில் ஆர்வமுள்ளவர் அனைவரும் இந்நூலகத்தில் உறுப்பினராகலாம்.

### 11.6. செய்தி மடல்

வாரியத்தின் செயல்பாடுகள், ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய சுற்றுச்சூழல் சம்பந்தமான செய்திகள், சுற்றுச்சூழல் சம்பந்தமான கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய செய்திமடல் ஒன்றை வாரியம் ஒவ்வொரு காலாண்டிற்கும் வெளியிட்டுவருகின்றது. இந்த செய்திமடல் அரசு துறை அலுவலகங்களுக்கும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்படுகின்றது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது.

**எம்.சி. சம்பத்**
**அமைச்சர் – சுற்றுச்சூழல்**